இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 11.05.2026

# என்ன பேச்செல்லாம் பேசினார் விஜய்?

தி.மு.க. கூட்டணியைக் கல்லாப்பெட்டி கூட்டணி என்றார் விஜய். அந்தக் கட்சிகள் தயவோடுதான் ஆட்சி அமைத்துள்ளார் விஜய்.

அறிவாலயம் வாசல் வழியாக நடந்து போனாலே அந்தக் கட்சி களை அழைத்து உள்ளே போட்டு சீட்டுக் கொடுத்து விடுவார்கள் என்று சொன்னார் விஜய். அவர்கள் தயவில்தான் இப்போது முதல மைச்சர் நாற்காலியில் உட்கார்ந்து இருக்கிறார் விஜய்.

கல்லாப்பெட்டி கட்சிகளின் அலுவலகத்துக்கு விஜய் ஏன் போனார்? ஏன் முகத்தை தொங்கப் போட்டுச் சென்றார்? முகத்தை தொங்கப் போட்டு உட்கார்ந்து இருந்தார்?

காங்கிரஸ் கட்சியைப் பற்றி என்ன சொன்னார் விஜய்? 'சில பல கோடிகளைக் கொடுத்து தமிழ்நாடு காங்கிரஸை, ஸ்டாலின் தனது பைக்குள் போட்டுக்கிட்டார்' என்று பேசினார். இன்று சில பல கோடி கள் கொடுத்துத்தான் காங்கிரஸ், ஆதரவைப் பெற்றாரா விஜய்? பிரவீன் சக்கரவர்த்தி போன்ற விஷப்பூச்சிகள் நிரம்பிய காங்கிரஸ் கட்சிக்கு விஜய் என்ன கொடுத்தார்? மூன்றாவது நாளே அந்தக் கட்சி பனையூரில் பெட்டிப் பாம்பாக அடங்கியதற்கு விஜய் என்ன கொடுத்தார்?

'சில பல கோடிகள் கொடுத்து காங்கிரஸ் கட்சியை, ஸ்டாலின் தனது பைக்குள் போட்டுக்கிட்டார்' என்று சொன்னதை யாரும் ராகுலுக்கு மொழிபெயர்த்துச் சொல்லவில்லையா? அவருக்கு ரோஷம் வரவில்லையா? ஆச்சர்யமாக இருக்கிறதே?

த.வெ.க. ஆட்சி அமைக்கும் அளவுக்கு பெரும்பான்மையை பெற்றுள்ளதா? இல்லையே? ரோஷக்கார விஜய், பதவிக்கு வந்திருக் கக் கூடாதே? பதவி ஏற்றிருக்கக் கூடாதே?

திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் வெற்றி பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, அகில இந்திய முஸ்லீம் லீக் கட்சி ஆகிய கட்சிகளின் தயவோடுதான் விஜய் ஆட்சி அமைத்துள்ளார்.

**அந்தக் கட்சிகள் வெளியிட்டுள்ள அறிக்கையை வாங்கிப் பாருங் கள் விஜய். உங்களை ஆதரித்து, உங்கள் தலைமையை ஏற்றுக் கொண்டு அவர்கள் உங்கள் ஆட்சியை ஆதரிக்கவில்லை. தமிழ்நாட்டில் இன்னொரு தேர்தல் வரக்கூடாது, ஆளுநர் ஆட்சி வரக்கூடாது, குடிய ரசுத் தலைவர் ஆட்சி வந்துவிடக் கூடாது என்பதால் த.வெ.க. ஆட்சி அமைக்க ஆதரவு என்றுதான் சொல்லி இருக்கிறார்கள். விஜய் மீது நம்பிக்கை வைத்து அவர்கள் ஆதரிக்கவில்லை. இதை விஜய் முதலில் உணர வேண்டும்.**

**"தமிழ்நாடு அரசியலில் நீண்ட காலமாகவே தி.மு.க. கூட்டணி யில் இருந்து வரும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அதே நிலையில் தொடரும்"** என்று தான் அய்யா காதர் மொய்தீன் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். **"தி.மு.க. கூட்டணியில்தான் விடுதலைச் சிறுத்தை கள் நீடிக்கிறது. நெருக்கடியான சூழலில் குடியரசுத் தலைவர் ஆட்சி யைத் தடுக்கவே த.வெ.க.வுக்கு ஆதரவு தர முன்வந்தோம்"** என்று சொல்லி இருக்கிறார் தொல்.திருமாவளவன்.

**"தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவும் மக்கள் நலனுக்காகவும் தொடர்ந்து தி.மு.க. கூட்டணியுடன் கை கோத்துப் போராடுவோம்"** என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் வீரபாண்டியனும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநிலச் செயலாளர் சண்முகமும் அறிவித்துள்ளார்கள். எனவே தி.மு.க. கூட்டணியில் தொடரும் கட்சிகளின் ஆதரவோடுதான் ஆட்சி அமைத்துள்ளார் விஜய். இதனை அவர் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

"அது என்ன ஸ்டாலின் சார் கூட்டணி பேரு? ... என்ன மக்கள் நலக் கூட்டணியா? மொத்த பேக்கேஜூம் அங்க தான இருக்குது. ரிசல்ட் என்னன்னு தெரிஞ்சதுனால என்னவோ அவர் அப்படியே மக்கள் நலக் கூட்டணியா அதை மாத்திக்கிட்டாரோன்னு தெரியலை. உடைஞ்ச கிளாஸை ஒட்ட வெச்சு மாதிரி, கிழிஞ்ச துணியை தச்சு வெச்சது மாதிரி. ஒட்டுப் போட்ட ஒரு கூட்டணி. அவ்வளவு தான்." என்று பேசியவரும் இதே விஜய்தான். அவரது ஆட்சியே இன்று உடைஞ்ச கிளாஸை ஒட்ட வைத்தது மாதிரிதான் அமைந்துள்ளது. கிழிஞ்ச துணியை தச்சு வெச்ச மாதிரிதான் இருக்கிறது.

இந்த உடைஞ்ச கிளாஸையாவது ஒழுங்காக பயன்படுத்தவும். கிழிஞ்ச துணியை வைத்தாவது தமிழ்நாட்டு மானத்தை காப்பாற்ற வும்.

பதவிக்கு வந்த பிறகு மட்டுமல்ல, பதவிக்கு வருவதற்கு முன், பொதுவாழ்க்கைக்கு வருவதற்கு முன்னும் வார்த்தைகளை அளந்து பேச வேண்டும். ஒரு சொல் வெல்லும். ஒரு சொல் கொல் லும். தீயினால் சுட்ட வடுகூட ஆறிவிடும். நாவினால் சுட்ட வடு மாறாது. 'பல வலிகளைத் தாண்டி வந்துள்ளேன்' என்கிறார் விஜய். இல்லை, பலரையும் வலி ஏற்படுத்திவிட்டு வந்திருக்கிறார் விஜய். அவரால் கரூரில் பலியான 41 உயிர்களை மறக்க முடியுமா? தமிழ் நாட்டு வரலாற்றில் கருப்பு நாட்களில் ஒன்று. அந்தக் குடும்பத்தின ரைக் கூட நேரில் பார்க்காமல் சென்னை ஹோட்டலுக்கு வர வைத்து பார்த்த கொடூரக் காட்சி, சினிமாவில் கூட பார்க்காதது.

**அரசியல் என்பது சினிமா அல்ல. கோடிக்கணக்கான மக்களை ஆள்வது அல்ல அரசியல். கோடிக்கணக்கான மக்களுக்காக வாழ்வதுதான் அரசியல்.**

**ஒரு ஹீரோவின் ஆட்டத்தை மக்கள் பார்ப்பது சினிமா. கோடிக்க ணக்கான மக்களின் ஆட்டத்தை ஒரு தலைவன் பார்ப்பது அரசியல். வேடிக்கை காட்டி வாழ்ந்துவிட முடியாது. வேடிக்கை பார்த்தும் ஆண்டு விட முடியாது.**

●●

## மக்களுக்கு நன்மைகள் தொடர, மாநிலம் வளர கழக அரசால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை புதிய அரசு தொடர வேண்டும்!

# சோதனைக் காலத்தில் உறுதியுடன் நின்ற தோழமை இயக்கத் தலைவர்களுக்கு நன்றி!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, மே 11–**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைத ளப் பதிவில், "மக்களுக்கு நன்மை கள் தொடர, மாநிலம் வளம்பெற கடந்த ஐந்தாண்டுகள் கழக அரசால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை புதிய அரசு தொடர வேண்டும் என வும், சோதனைக் காலத்தில் உறுதியு டன் நின்ற தோழமை இயக்கத் தலை வர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியையும் பாராட்டையும் தெரி வித்துக் கொள்கிறேன்" என்றும் தெரி வித்துள்ளார்.**

*கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:*



என் உயிரோடு கலந்திருக்கும் தலை வர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புக ளுக்கும், என் உயிர்நிகர் தமிழ் மக்க ளுக்கும் என் அன்பு வணக்கம்.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பு, நடக்கும் நிகழ்வுகளை நீங்கள் பார்க்கிறீர்கள். எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை கிடைக் காத வகையில் சட்டமன்றத் தேர்தல் முடி வுகள் அமைந்திருந்தன. ஆட்சி அமைக் கும் அளவுக்குப் பெரும்பான்மை இடங்களைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை யிலான மதச்சார் பற்ற முற்போக்குக் கூட்டணி பெற வில்லை என்றாலும், குறிப்பிடத்தக்க வாக்குகளை நாம் பெற்றுள்ளோம்.

**கட்சியின் நலன் கருதி முடிவு எனக் கூறியிருந்தேன்!**

நான் ஏற்கனவே பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில், புதிய ஆட்சி அமை வதற்கு இடையூறாக இருக்க மாட்டோம் என்றும், ஆக்கபூர்வமான எதிர்க்கட்சி யாக தி.மு.க. செயல்படும் என்றும் சொல் லியிருந்தேன்.

அதன்பின், என் தலைமையில் நடந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், முடிவெடுக்கும் பொறுப்பை எனக்குக் கொடுத்தார்கள். அந்தக் கூட்டத்தில், "கட்சியின் நலனை மனதில் வைத்து, தலைமைக் கழக நிர்வாகிகளு டன் கலந்து பேசி முடி வெடுப்பேன்" எனத் தெரிவித்தேன்.

ஆட்சி அமைக்கும் பெரும்பான்மை யாருக்கும் கிடைக்காத நிலையில், மாற்று யோசனைகளைப் பலரும் சொன்னார்கள். என்னைப் பொறுத்த வரை, தோழமைக் கட்சிகள் எந்த முடிவை எடுத்தாலும் அவர்களின் முடிவை மதித்து ஒருங்கிணைந்து செயல்பட்டு, நிலையான ஆட்சி அமைய வேண்டும்; இன்னொரு தேர்தலுக்கு வழிவகுத்துவிடக் கூடாது என்பதே எனது எண்ணமாக இருந்தது.

**கூட்டணிக் கட்சிகளின் அறிவிப்பை வரவேற்கிறேன்!**

எங்களது கூட்டணியைச் சார்ந்த தோழர்கள், "இன்றைய நெருக்கடியான சிக்கலைத் தவிர்க்க, நாங்கள் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவித்தாலும், கொள்கை அடிப்படையில் தி.மு.க. தலைமை யிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் தொடர்கிறோம்" என்று அறிவித்திருப்பதை நான் வரவேற் கிறேன்.

கூட்டணியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற காங்கிரஸ் எம்.எல்.ஏ.க் கள் நன்றி தெரிவிக்க அண்ணா அறிவா லயம் வரவில்லை. ஒரே நாளில் தி.மு.க. வுடனான உறவை முறித்துக் கொண்டு காங்கிரஸ் கட்சி சென்றது. அதேசமயம் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவும் மக்கள் நலனுக்காகவும் தொடர்ந்து தி. மு.க.வுடன் கைகோத்துப் போராடு வோம் என்று கம்யூனிஸ்ட் தலைவர்கள் தோழர் சண்முகம், தோழர் வீரபாண்டி யன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் அவர்களும் அறிவித்துத் தோழமை உணர்வை வெளிப்படுத்தியுள்ளது, கொள்கையில் வலுவாக உள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் காட்டுகிறது.

**சோதனைக் காலத்தில் உறுதியுடன் நின்றவர்கள்!**

இந்நேரத்தில் மிக முக்கியமான சோதனைக் காலத்தில் உறுதியுடன் உடன் நின்ற தோழமை இயக்கத் தலை வர்கள் பேராசிரியர் அய்யா காதர் மொகி தீன், அண்ணன் வைகோ, சகோதரி பிரேமலதா விஜயகாந்த், பேராசிரியர் ஜவாஹிருல்லா, சகோதரர்கள் ஈஸ் வரன், தமிமுன் அன்சாரி உள்ளிட்ட அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன் றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்களின் உறுதிக்கு எத்தகைய நன்றியும் பாராட்டும் பொருந்தும்.

கடந்த ஐந்தாண்டு காலத்தில் தமிழ் நாட்டை அனைத்துத் துறைகளிலும் வளர்த்தெடுத்து, தமிழ்நாட்டை வளப் படுத்தியிருக்கிறோம். ஏராளமான திட்டங்களின் மூலமாக ஒவ்வொரு தனி மனிதரும் நன்மை அடைய வழிவகை செய்துள்ளோம்.

தொலைநோக்குச் சிந்தனையும், வளமான திட்டமிடலும் கொண்ட அந்தத் திட்டங்களை அமைய இருக்கும் புதிய அரசு தொடர வேண்டும் என்பதே எனது தனிப்பட்ட விருப்பமாகும்.

**புதிய அரசுக்கு எனது வாழ்த்துகள்!**

மகளிர், இளைஞர்கள், மாணவர் கள், குழந்தைகள், விளிம்புநிலை மக் கள், அரசு ஊழியர்கள் ஆகியோரை உள்ளடக்கிய அனைத்துத் திட்டங்களை யும் தொடர்ந்து செயல்படுத்தினால் மக்க ளுக்கும் நன்மைகள் தொடரும்; மாநில மும் வளரும். இதனைக் கவனத்தில் கொண்டு புதிய அரசு செயல்பட வேண் டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைய இருக்கும் புதிய அரசுக்கு மீண்டும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# 'திராவிட மாடல்' அரசின் திட்டங்களை செயல்படுத்த வேண்டும்!

## மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா அறிவுறுத்தல்!

சென்னை, மே 11–

திராவிட மாடல் அரசின் நல் லாட்சித் திட்டங்களையும், மக் கள் நலப் பணிகளையும் புதிய அரசு முன்னெடுத்து செல்ல வேண்டும் என்று மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹி ருல்லா அறிவுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த காலத்தில் தி.மு.க. அரசு தமிழ்நாட்டில் கல்வி, சுகாதாரம், பெண்கள் நலன், சமூக நீதி, சிறு பான்மையினர் பாதுகாப்பு, தொழில் வளர்ச்சி மற்றும் மக்கள் நலத் திட்டங்கள் உள்ளிட்ட பல துறைகளில் முன்னேற்ற மான பணிகளை மேற்கொண்டது என்று தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மகளிர் உரிமைத் தொகை, பெண்களுக்கான இல வச பேருந்து பயணம், பள்ளிக் கல்வி மேம்பாடு, மருத்துவ சேவைகள் விரிவாக்கம் போன்ற மக்கள் நலத் திட்டங்கள் மாபெ ரும் வரவேற்பைப் பெற்றன. இந்த நல்லாட்சித் திட்டங்களை யும், மக்கள் நலப் பணிகளையும் தொடர்ந்து முன்னெ டுத்து செல் லும் பொறுப்பு புதிய அரசுக்கு உள்ளது என்று ஜவாஹிருல்லா தெரிவித்துள்ளார்.

அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி, தமிழ்நாட்டின் வளர்ச்சி, சமூக நல்லிணக்கம் மற்றும் அனைத்து தரப்பு மக்களுடைய நலனே முதன்மை பெற வேண் டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாடு சமூக நீதி, மதச் சார்பின்மை, சகோ தரத்துவம் ஆகிய அடிப்படை மதிப்புகளை நிலைநிறுத்திய மாநிலமாக தொடர்ந்து விளங்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தி யுள்ளார்.

புதிய அரசு மக்களின் எதிர் பார்ப்புகளை நிறைவேற்றி தமிழ் நாட்டை மேலும் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்று ஜவாஹி ருல்லா அறிவுறுத்தியுள்ளார்.

### 'வந்தே மாதரம்' பாடலுக்கு முதலிடம் வழங்கி

# தமிழை மூன்றாம் நிலைக்குத் தள்ளியது மரபு மீறிய செயலாகும்!

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!

**சென்னை, மே 11–**

**" 'வந்தே மாதரம்' பாடலுக்கு முதலிடம் வழங்கி தமிழை மூன்றாம் நிலைக்குத் தள்ளியது மரபு மீறிய செயலாகும்" என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டி யன் கண்டனம் தெரி வித்துள்ளார்.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி யின் தமிழ்நாடு மாநில செயற் குழு சார்பில் செயலாளர் மு.வீர பாண்டியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

முதலமைச்சர் பொறுப்பேற் கும் சி.விஜய்க்கும், அரசு விழா மரபில் தமிழ்த்தாய் வாழ்த்து முதலிடம் பெற வேண்டும்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர் தல் முடிவில் தனிப் பெரும் கட்சி யாக வந்த தமிழக வெற்றிக் கழகத்தை ஆட்சியமைக்க அழைக்காமல் ஆளுநர் இழுத் தடித்து வந்தார்.

குறுக்கு வழியில் ஆட்சிய மைக்க பல்வேறு வழிகளில் நடந்த முயற்சிகளை முறியடிக்க, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் வெற்றி பெற்ற, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகிய கட்சிகள் கலந்தாலோ சித்து வழங்கிய ஆதரவின் அடிப் படையில் நேற்று (10.05.2026) தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்றுக் கொண்டது.

அரசின் முதலமைச்சர் மற் றும் அமைச்சரவை உறுப்பினர் கள் பதவி ஏற்பு விழாவும் நடை பெற்றது. இந்த விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டு, வந்தே மாதரம், நாட்டுப் பண் முதல் இரு நிலைகளுக்கு உயர்த்தப்பட்டிருக் கிறது. இது தமிழ்நாடு அரசு இது வரை அரசு விழாக்களில் தொடக் கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தும், நிறைவில் தேசிய கீதமும் பாடு வது, நாட்டின் விடுதலைக்கு பிறகு இதுவரை கடைப்பிடித்து வரும் மரபாகும்.

"வந்தேமாதரம்" ஒரு குறிப் பிட்ட கடவுளுக்கு அர்ப்பணிக்கப் பட்டதும் ஒரு மதச்சார்புடையது மான அப்பாடல் என்பதால் தேசிய கீதமாக இருக்க முடியாது என விடுதலை இயக்கக் காலத்தி லேயே தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆளுநர் மாளிகை உத்தரவுப்படி, தமிழ் நாடு அரசு ஏற்பாடு செய்த பதவி ஏற்பு விழா நிகழ்ச்சி நிரலில் "வந்தேமாதரம்" பாடலுக்கு முதலிடம் வழங்கி, தமிழை மூன்றாம் நிலையில் வைத்தது மரபை மீறிய செயலாகும். இந்த தவறுக்கு காரணமானவர்கள் யார் என்பதை தமிழ்நாடு அரசு பொதுமக்களுக்கு விளக்க வேண்டும். தமிழக வெற்றிக் கழ கம் தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முதலிடம் பெறுவதை உறுதி செய்ய வேண்டும். இந்தத் தவறு தொடருவதை அனுமதிக்கக் கூடாது.

இன்று (11.05.2026) சட்ட மன்ற உறுப்பினர்கள் பதவி ஏற் புக்காக கூடும் சட்டப் பேரவைக் கூட்டத்திலும், அனைத்து அரசு நிகழ்வுகள் விழாக்களிலும் முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதையும், நிறைவாக நாட்டுப் பண் இசைப்பதையும் உறுதி செய்ய வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு, தமிழ்நாடு அரசின் முதலமைச்ச ரையும், தாற்காலிக பேரவைத் தலைவரையும் கேட்டுக் கொள் கிறது.

இவ்வாறு அந்த அறிக்கை யில் அவர் கூறியுள்ளார்.